# "பழைய முறையிலாவது உடனே நடத்துங்கள்"

## பெஃப்ரல் கூட்டத்தில் 41 கட்சிகள் கூட்டுப் பிரகடனம்

இலங்கையில் நீண்டகாலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது மற்றும் அதற்கான தேர்தல் முறைமைகள் குறித்து, அரசியல் கட்சிகளுக்கும் சிவில் அமைப்புகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று 'பெஃப்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் செவ்வாய்க்கிழமை (26) அன்று கொழும்பில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# "பழைய முறையிலாவது உடனே நடத்துங்கள்"

அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகள் கலந்துகொண்ட இம்மாநாட்டில், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் முக்கியத்துவம், இத்தனை காலம் தாழ்த்துவதற்கான காரணங்கள் மற்றும் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.எல்லை நிர்ணயச் சிக்கல்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் காரணமாக, இலங்கையின் 9 மாகாண சபைகளுக்குமான தேர்தல் கடந்த 7 வருடங்களாக நடத்தப்படாமல் ஆளுநர்களின் நேரடி ஆட்சி நீடிக்கிறது. இத்தேர்தல் முடக்கத்திற்குத் தீர்வுகாணும் நோக்கில், 'பெஃப்ரல்' (PAFFREL) அமைப்பினால் கொழும்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற எதிர்க்கட்சிகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் உள்ளிட்ட 42 தரப்புகளில், ஒரேயொரு கட்சியைத் தவிர ஏனைய 41 தரப்பினரும் ஒன்றிணைந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுப் பிரகடனம் ஒன்றில் கையெழுத்திட்டனர்.

தமிழ் Mirror ONLINE
www.tamilmirror.lk